# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 212/2017 | Village | : | |
| Prosecution witness | : | PW- 6 | Taluk | : | |
| Name | : | **திரு.மூர்த்தி** | Occupation | : | |
| Father Name | : | திரு. ராமலிங்கம் | Age | : | 59 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 04.08.2025.**

**Both Accused present.**

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜ்ரோடு, நம்பர் 19 பிரபா நகர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் விக்னேஷ் ஏஜென்சியில் சேல்ஸ் மேனாக வேலை பார்க்கிறேன். அது அருளானந்தம் நகரில் உள்ளது. இறந்துபோன ரமேஷ் என்னுடன் சேல்ஸ் மேனாக வேலை பார்த்தவர். அ.சா.5 சுரேஷ்குமார் தேவி எலக்கட்டிரிக்கலில் வேலை பார்த்தார் அது கீழ ராஜ வீதியில் உள்ளது. 25.5.2017 அன்று காலை10 மணிக்கு நானும், ஜான் இருதயராஜ்ம் வேலைக்கு சென்றோம். அப்போது ஏஜென்சியில் ஒரே கூட்டமாக இருந்தது. என்னவென்று விசாரித்தபோது ரமேஷை யாரோ கொலை செய்துவிட்டதாக கூட்டத்தில் சொன்னார்கள். பின்பு ஓனரை பார்க்கபோனோம் அவரர் போலிஸ்க்கு புகார் செய்ய சென்றதாக சொன்னார். அதன்பிறகு 11.20 க்கு போலிஸார் வந்தார்கள். அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் நானும், ஜான் இருதயராஜ்ம் கையெழுத்திட்டோம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணத்தில் 1வது கையொப்பம் என்னுடையது 2வது ஜான் இருதயராஜ்உடையது அது **அ.த.சா.ஆ.3** பார்வைமகசராகும். அதன்பிறகு சம்பவ இடத்தில் இரத்தம் படிந்த சிமெண்ட் தரை, இரத்தம் படியாத சிமெண்ட் தரை உடைத்து எடுத்து கைபற்றினார்கள். அந்த கைபற்றுதல் மகசரில் நானும், ஜான் இருதயராஜ்ம் கையெழுத்திட்டோம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணத்தில் 1வது கையொப்பம் என்னுடையது 2வது ஜான் இருதயராஜ் உடையது அது **அ.த.சா.ஆ.4** கைபற்றுதல் மகசராகும். என்னிடம் காண்பிக்கபடும் இரத்தம்

படிந்த மற்றும் இரத்தம் படியாத சிமெண்ட் தரையாகும். அது **சா.பொ.3, 4 ஆகும்.** போலிஸார் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

விக்னேஷ் ஏஜென்சி என்பது ஆர்ச்சி வழியாக வரும்போது வலது கைபக்கமாக உள்ளது என்றால் ஆமாம். யாகப்பா நகர் என்பது நேர் சாலையில் சென்று அண்ணாநகருக்கு திரும்பும் என்றால் ஆமாம். யாகப்பா நகரிலிருந்து திரும்பி அண்ணாநகர் இடம் போக்குவரத்து மிகுதியான கடைகள் உள்ள இடம் என்றால் ஆமாம். யாகப்பா நகரில் இருபக்கமும் வல, இட பக்கமும் கேமராபொறுத்தபட்டிருக்கும் என்றால் நான் பார்த்ததில்லை. சா.பொ. 1 ரமேஷ் பேக் என்றால் தெரியாது. 25.5.2017 லிருந்து 30.5.2017 வரைக்கும் நானும் என் உரிமையாளரும் எல்லோரையும் தெற்கு காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார் என்றால் ஆமாம். அப்போது 1வது எதிரி ரெனால்டு காவல்நிலையத்தில் இருந்தார் என்றால் தெரியாது. நான் கையெழுத்துபோட்ட பார்வை மகசர் மற்றும் கைபற்றுதல் மகசரில் போலிஸார் கையால் எழுதி கொண்டு கையெழுத்து வாங்கினார் என்றால் ஆமாம். ஈங்கு பேனாவா பால்பாய்ண்ட் பேனாவா என்றால் ஞாபகமில்லை. நான் கையெழுத்துபோட்ட தாள் கணினியில் அச்சடிக்கபட்டது என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல் போலிஸ் எங்கள் அலுவலகத்தில் வந்து பார்த்து எடுக்கவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தார் என்றும் அதில் நான் கையெழுத்துபோட்டேன் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப ,நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**